# மூலகுரு போற்றி

ஏகாந்தத் திருந்து யாதும் உணர்ந்தாய்
ஏக பரம் பொருளை இன்புடன் துதித் திருப்பாய்
ஆகாச ரூபிணியை அறிவொளியில் அமர்த்துவாய்
நாளும் பரவெளி பேரொளி கலந்திருப்பாய்
பாகாக அங்கமுருகி மோனநிலையில் களித்திருப்பாய்
பாங்கான மூலமதில் மனமடங்கி லயித்திருப்பாய்
சாகாக்கலை அறிந்து நாளும் சமாதி கூடி இருப்பாய்
சர்வ சக்தி சித்தநாதரே எல்லாம் வல்ல
சித்தரே உம்திருத்தாள் போற்றி போற்றி – 1

உம் தாள் அளிக்க வேண்டும் உயர்தல பேறு தான்
உம்நினைவு நல்க வேண்டும் உயர் பேரின்பமே தான்
உம் பால் விரும்பியே வந்துற்றோம் யாங்களும் தான்
உயர்வான சிவ யோகம் அருளவேண்டும் தாங்களும் தான்
எம்பால் சூழ்ந்திடும் கோள்வினை முழுக்கவே தான்
தப்பாமல் அறுத்தெறிப்பீர் உம் அருளால் தான்
எம்பால் மனம் கனிந்து கடையேனையும் தான்
எதிர் கொண்டு பொருட்டாக எளியோனுக்கும் உபதேசித்த எல்லாம்
வல்ல சித்தரே உம்திருத்தாள் போற்றி போற்றி – 2

உபதேசமும் அருள் தேசமும் உம் மோன மொழியாகும்
உலகாதயமும் உறுத்தும் சொல்லும் உம்புறதேசமாகும்
அபவாதமும் பழிசொல்லும் தீண்டாது உம் கேசம் தான்
அற்பர் பொருளும் ஆணவ போக்கும் அண்டாது உம் தலம் தான்
தபயோகமும் மோன சுகமும் நல்கிடுமே உம் பாசம் தான்
தருமநெறியும் ஆன்மஞானமும் விளக்கிடும் உன் ஆசனம் தான்
விபரமாய் மொழியாது சூட்சும குறியால் மொழிந்து உபதேசித்த
வித்தக ரூபனே எல்லாம் வல்ல சித்தரே
உம்திருத்தாள் போற்றி போற்றி – 3

சித்தனென்றால் மலைப்பதற்கு ஏதுமில்லை என்ற குருநாதரே
சிற்றுயிரும் துயர்படாது சுகிப்பவனே சித்தனாவான்
சித்தனென்றால் களவாய் பொருள் கூட்டாது பொருள்
சிரமம் நோக்காது உற்றதில் மகிழ்பவனே சித்தனாவான்
சித்தனென்றால் உயர்வோர் வெறுக்கும் செயல்களை
சிறிதும் செயலில் கொள்ளாது வாழ்பவனே சித்தனாவான்
சித்தனென்றால் தாமும் சுகித்து மற்றோரையும் காத்திடும்
சிறப்பான விருட்சம் போன்றவனே சித்தனாவான் என மொழிந்த
எல்லாம் வல்ல சித்தரே உம்திருத்தாள் போற்றி போற்றி – 4